# நாட்டைப் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தம்

இந்தக் கேள்வி எழும்பலாம்: "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் சந்தியார்களுக்கு அந்த நிலம் என்றென்றும் உரியதாயிருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணவில்லையா?"

ஆபிரகாம் கல்தேயரின் ஊர் என்ற பட்டணத்திலிருந்து ஆரானுக்குச் சென்று ஒரு குறுகிய காலம் அங்கு தங்கியிருக்கவும் பின்பு (இன்றைய நாளின் இஸ்ரவேலான) கானானுக்குள் செல்லவும் தொடங்கிய பிறகு அவருடனும் அவரது சந்ததியினருடனும் தேவன் ஏற்படுத்திய நாட்டு உடன்படிக்கையின் முதல் குறிப்பிடுதல் இருந்தது. அந்த வேளையில் தேவன் ஆபிரகாமிடம் *"உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" (ஆதி. 12:7ஆ)* என்று உரைத்தார்.

ஆபிரகாம் அந்த நாட்டில் மேலும் குடியமர்ந்த பொழுது அவரிடத்தில் தேவன், *"... உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப் பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து" (ஆதி. 13:14ஆ, 15; உபா. 12:1ஐக் காணவும்)* என்று கூறினார். பிற்பாடு இந்த வாக்குத்தத்தத்தைத் தேவன் ஒரு உடன்படிக்கையின் வடிவத்தில் ஏற்படுத்தினார், அதில் அவர் ஒரு எல்லையைத் திட்டவட்டமாய் வகுத்தார். கானானில் இருந்து பத்து இனங்களின் நாட்டுப் பகுதி உள்ளிட அந்த எல்லைப் பகுதியை மோசே எண்ணாகமம் *34:2-12*ல் மிகப் பெரும் விபரங்களுடன் விவரித்துரைத்தார்: *"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கை பண்ணி, எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ளதும் ... இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி. 15:18, 21).* சாலொமோனின் அரசானது இந்த நிலப் பகுதியை உள்ளடக்கியிருந்தது: *"நதி தொடங்கி, பெலிஸ்தர் தேச வழியாய் எகிப்தின் எல்லைமட்டும் இருக்கிற சகல இராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டு கொண்டிருந்தான்" (1 இரா. 4:21அ).*

ஆபிரகாமுக்குத் தேவன் ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தமானது ஈசாக்குக்கும் *(ஆதி. 26:3, 4)* மற்றும் யாக்கோபுக்கும் அவருக்குப் பின் யாக்கோபின் சந்ததியினருக்கும் *(ஆதி. 28:13; 35:12)* அளிக்கப்படும் என்ற உறுதியுடன் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்பு, அவர்களின் சந்ததியார் எகிப்தை விட்டுச் சென்ற பிறகு தேவன் இஸ்ரவேல் நாட்டாருக்கு அந்த தேசத்தை வாக்குத்தத்தம் செய்தார் *(யாத். 6:4, 8).*

*யோசுவாவின் தலைமைத்துவம் மூலமாக இஸ்ரவேலர்கள் அந்த பூமியை வெற்றி கொண்டு அதில் குடியமர்ந்தனர். யோசுவாவின் ஊழியம் நிறைவேறிய பொழுது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தைக் காத்துக் கொண்டிருந்ததை நாம் வாசிக்கின்றோம்:*

> *இந்தப் பிரகாரமாகக் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தையெல்லாம் கொடுத்தார்; அவர்கள் அவைகளைச் சுதந்தரித்துக் கொண்டு, அவைகளிலே குடியிருந்தார்கள் (யோசு. 21:43).*

> *உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை (யோசு. 23:14ஆ).*

*இஸ்ரவேலருக்குப் நிலம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அதைப் பெற்றுக்கொண்டு அதில் நிலைத்திருப்பதென்பது அவர்கள் தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் காண்பிக்கும் மதிப்பைச் சார்ந்ததாகவே இருந்தது.*

> *நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக் கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான் (உபா. 30:19, 20).*

*எகிப்திலிருந்து வெளியேறிய தலைமுறையில் - தேவன் நாட்டை வாக்குத்தத்தம் செய்திருந்த தலைமுறையில் (யாத். 6:8; 12:25; உபா. 9:23) - இரு மனிதர்கள் மட்டுமே நிலப் பகுதி எதையாவது பெற்றுக் கொண்டனர் (எண். 32:9-12; உபா. 1:35, 36; யோசு. 5:6). இஸ்ரவேலர் தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தவைகளைச் செய்யாதிருந்தால், அவர் இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியடித்திருந்த மற்ற இனங்களுக்குத் தாம் செய்யத் திட்டமிட்டிருந்தவற்றை இஸ்ரவேலுக்குச் செய்வார் (எண். 33:55, 56); அவர் தேசத்தை அவர்களிடமிருந்து எடுத்து விடுவார்.*

*தேசமானது நிபந்தனைக்குட்பட்டே இஸ்ரவேலர்களுடையதாய் இருந்தது. ஆதி. 13:15ல் தேவன், “நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி செய்து” என்று கூறினார். இருப்பினும் இந்த வாக்குத்தத்தத்தில் உள்ள “என்றைக்கும்” என்ற*

*பதமானது olam என்ற எபிரெய வார்த்தையாகும், இது "தொடர்ந்து" என்று அர்த்தப்படுகின்றது, ஆனால் இது "நித்தியத்திற்கும்" என்று அர்த்தப் படுவதற்கு அவசியமில்லை. இது "நான் ... உனக்குப் பின் வரும் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் ..." (ஆதி. 48:4ஆ; யாத். 32:13ஐயும் காணவும்) என்ற கூற்றில் உள்ளது போல "நித்தியமானது" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*Olam என்பது "ஒருபோதும் முடிந்திராத" என்று அர்த்தப்பட அவசியமில்லை என்பதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் போதுமான தாயிருக்கும்:*

*(1) மக்கள் மோசேயின் மேல் "என்றைக்கும்" (olam; யாத். 19:9) விசுவாசமாயிருப்பார்கள் என்று தேவன் கூறினார். அதன் பிறகு விரைவிலேயே அவர்கள் மோசேயின்மீது நம்பிக்கையிழந்து இன்னொரு தலைவரை நியமிக்க விரும்பினார்கள் (எண். 14:4).*

*(2) தன் எஜமானன் மீது பிரியமாய் இருந்த எபிரெய அடிமை அவருக்கு "என்றைக்கும்" (olam; யாத். 21:6) ஊழியம் செய்வான் - மரணத்திற்குப் பிறகோ, அடிமையானவன் அவனது எஜமானருக்கு ஊழியம் செய்யான் (யோபு 3:19).*

*(3) ஆரோனின் மகன்களுடைய ஆசாரியத்துவம் "நித்தியமானதாக" (olam; யாத். 40:15) இருக்க வேண்டியதாய் இருந்தது. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதென்று புதிய ஏற்பாடு எடுத்துரைக்கின்றது (எபி. 7:12-14).*

*(4) தகன பலி செலுத்துதல்கள் "நித்தியமானதாக" (olam; லேவி. 6:18) இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இருப்பினும், அந்தப் பலி செலுத்துதல்கள் இப்பொழுது ஏற்படுத்தப் படுவதில்லை. அவைகள் "வரப் போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்" (எபி. 10:1-4) இருந்தன.*

*மற்ற பல எடுத்துக்காட்டுகள் தரப்பட முடியும். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் வரையிலும் தேசமானது அவர்களுடையதாய்த் தொடர்ந்திருக்கும் என்று வாக்குத்தத்தம் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், இஸ்ரவேலர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போவார்கள் என்றும் "தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவார்கள்" (உபா. 28:63ஆ) என்றும் மோசே அவர்களுக்குக் கூறியிருந்தார்.*

*உடன்படிக்கையை முறித்துப் போடுவதற்காக இஸ்ரவேலர்களைத் தண்டிப்பதாகத் தேவன் வாக்குறுதியளித்திருப்பினும், அவர்களை முற்றிலுமாய் அழித்து விடாமலிருப்பதாகவும் தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார். நாம்,*

> *அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர். அவர்களுடைய தேவனாயிருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படச்செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே*

*நான் பண்ணின உடன் படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவு கூருவேன்; நான் கர்த்தர் (லேவி. 26:44, 45) என்று வாசிக்கின்றோம்.*

இது ஏன் நேரிட்டிருந்ததென்று இனங்கள் யாவும் வியப்படையும் என்று தேவன் முன்னுரைத்திருந்தார்:

> *அந்த ஜாதிகளெல்லாம் கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெறிந்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுவார்கள். அதற்கு: அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் விட்டுப் போய் ... என்று சொல்லப்படும் (உபா. 29:24, 25).*

உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படியே தேவன் இஸ்ரவேலுக்கு எதிராகச் செயல்பட்டார்: அவர்களை அவர் தண்டித்தார். தேவனுடைய எச்சரிக்கைகள் இருந்த போதிலும், இந்தத் தண்டனையானது இஸ்ரவேலை அவரிடத்தில் திரும்பச் செய்யவில்லை. எரேமியாவிடம் பேசிய தேவன்,

> *ஆனாலும் அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்; ஆதலால் நான் அவர்கள் செய்யும்படி கட்டளை யிட்டதும், அவர்கள் செய்யாமற் போனதுமான இந்த உடன் படிக்கையின் வார்த்தைகளை யெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப் பண்ணுவேன் ... அவர்கள் என் வார்த்தைதளைக் கேட்க மாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப் பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள்; நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் மீறிப் போட்டார்கள். ஆகையினால் இதோ, அவர்கள் தப்பித்துக் கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்; அப்பொழுது என்னை நோக்கிக் கூப்பிடுவார்களே; நான் அவர்களைக் கேளாதிருப்பேன் ... (எரே. 11:8-11).*

தேவன் தம்முடைய மக்களின் கடைசி அரணான எருசலேமை அழிக்கும் பொழுது பின்வருவது நடக்கும்: *"அநேகம் ஜாதிகள் இந்த நகரத்தைக் கடந்து வந்து, அவனவன் தன்தன் அயலானை நோக்கி: இந்தப் பெரிய நகரத்துக்குக் கர்த்தர் இப்படிச் செய்தது என்னவென்று கேட்பார்கள். அதற்குப் பிரதியுத்தரமாக: அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனை செய்தபடியினால் இப்படியாயிற்று என்பார்கள் என்று சொல்லுகிறார்" (எரே. 22:8, 9).*

இஸ்ரவேல் மக்கள் மற்ற நாட்டவர்களுக்கு ஒரு பாடப் பொருள் ஆனார்கள். தேவனுக்குக் கீழ்ப்படியும் உடன்படிக்கையை மீறியதினால்

தேவன் அவர்களுக்கு பதிலாய் வாக்குத்தத்தம் செய்திருந்த ஆசீர்வாதங்களை அவர்கள் தாங்களாகவே இழந்து போனார்கள்.

---

## கட்டளைகள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையாக உள்ளன

ஒவ்வொரு நியாயப்பிரமாணமும் கட்டளைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதாக உள்ளது. இதை இன்னொரு வகையில் கூறுவதென்றால், கட்டளைகள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையாக உள்ளன. தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த நியாயப்பிரமாணமானது கட்டளைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்று எழுதியதன் மூலம் பவுல் இதைச் சுட்டிக்காட்டினார் (ரோமர் 7:7, 8). இயேசுவின் பிரமாணமானது இயேசு கட்டளையிட்டவைகளைக் கொண்டு - அவருடைய சீஷர்களாகும் எல்லாராலும் கடைப் பிடிக்கப்பட்டு மற்றும் போதிக்கப்பட வேண்டிய விஷயங்களைக் கொண்டு - கட்டப்பட்டுள்ளது (மத். 28:20).

புதிய உடன்படிக்கையில் “கட்டளை” என்ற வார்த்தை ஒரு மோசமான வார்த்தையாக இருப்பதில்லை, ஏனென்றால் இயேசுவுடனான நமது உறவானது அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடிப்பதையே சார்ந்துள்ளது. இயேசு கட்டளையிட்டுள்ளவைகளை நாம் செய்தால் நாம் அவருடைய நண்பர்களாய் இருப்போம் (யோவா. 15:14). கீழ்ப்படிதலின் மூலமாகவே நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பைக் காண்பிக்கிறோம் (யோவா. 14:15). நாம் அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தால் அவர் நம் மீது அன்புகூர்ந்து, தம்மை நமக்கு வெளிப்படுத்தி, நமக்குள் வாசம் பண்ணுவார் (யோவா. 14:21, 23). நாம் இப்பொழுது வாழ வேண்டிய வகை முறைக்கு அவரது கட்டளைகளே அடிப்படையாக உள்ளன (யோவா. 13:34; 14:21-23; 15:10, 12; 1 கொரி. 7:19; 14:37; 1 தெச. 4:2; 2 பேது. 3:2; 1 யோவா. 2:4; 3:22; 5:2, 3), மற்றும் அவைகளே நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கும் அடிப்படையாக உள்ளன (யோவா. 12:50).